தமிழமுது | வாரஇதழ்
நவம்பர் 22,2014

# டுஸீன் தசைச்சிதைவு நோயா?

டுஸீன் தசைச்சிதைவு நோய் என்பது வம்சா வழியாக குழந்தைகளை தாக்க கூடிய நோய். இந்நோய் ஆண் குழந்தைகளை மட்டுமே பாதிக்கிறது. மரபணு பரிசோதனை, ஆலோசனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (MDCRC). என்ற தொண்டு நிறுவனம் டுஸீன் தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டுபிடிக்கவும், வருங்கால சந்ததிகளுக்கு இந்நோய் வராமல் தடுக்கவும், இந்நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவவும்ஒரு முழுமையான அணுகுமுறையை கடைபிடித்து வருகிறது. இதுபற்றி அந்த நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் B.R.லஷ்மி கூறுகையில் :

உலக அளவில் 3,500 குழந்தைகளில் 1 குழந்தை இந்நோயினால் பாதிக்கப்படுகிறது. இதனால் டுஸீன் குழந்தைகள் குழந்தை பருவத்திலேயே நடக்கும் திறனை இழந்து விடுகின்றனர். இளம்பருவத்தில் கைகளின் செயல் திறன் இழந்து விடுவதால் எழுதுவது, சாப்பிடுவது போன்ற அன்றாடம் செய்யக்கூடிய வேலைகளையும் செய்து கொள்ள முடியாமல் போகிறது. படிப்படியாக செயல் திறன் குறைந்து சுவாசிக்கும் திறனையும் இழந்து விடுகிறார்கள். இதனால் வளர்ச்சி முழுமை அடைவதற்குள் சுவாசப் பிரச்சனைகள் மற்றும் இருதய கோளாறுகளால் இளம் பருவத்திலேயே இறந்துவிடுகிறார்கள். எனவே இந்நோயை ஒழிக்க ஒருங்கிணைந்த மற்றும் தீர்க்கமான முயற்சிகள் தேவை. தசைச் சிதைவு நோயின் தாக்கத்தை குறைப்பதோடு அல்லாமல் மேலும் தசை வலுவிழந்து போகாமல் தடுப்பதில் உடலியக்கப் பயிற்சி பெரும் பங்கு வகுக்கிறது. இதற்காக டுஸீன் தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட அனைத்து குழந்தைகளும் எங்களுடைய மையத்திற்கு அழைத்து வரப்பட்டு இங்கு அவர்களுக்கு முழு நேர உடலியக்கப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்துள்ளோம். மேலும் இங்கு அவர்கள் வந்து போக எதுவாக வாகன வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்போது எங்களுடைய மையமானது கோவை குறிஞ்சி மருத்தவமனையில் அமைத்துள்ளது.

தொடர்புக்கு 94428-48686